1986 நவம்பர் 25]

(அ) அரக்கோணம் வட்டம் உரியூர், நாகவேலு, பருத்திப் புத்தூர், வளர்புரம், முதூர் ஆகிய ஊர்களில் உள்ள ஏரிகளை சீர் செய்யும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

நாங்குநேரி கொடுமுடியாறு அணைத் திட்டம்.

116—(*வினா எண் 3447)—திரு. மு. ஜான் வின்செண்ட் மற்றும் திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் கொடுமுடியாறு அணைத் திட்ட ஆய்வுப் பணிகள் முடிவடைந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) திட்டத்தை மேற்கொள்ள அரசின் ஒப்புதல் வழங்கப் பட்டுவிட்டது.

(இ) ரூ. 1,560 இலட்சங்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மு. ஜான் வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொடுமுடியாறு திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவை சமீபத்திலே இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இந்தத் திட்டத்தின் வேலைகள் இயங்கவில்லை என்று பொதுமக்கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. அங்கே இயந்திரங்கள் எவ்வளவு வந்திருக்கின்றன, அந்த அலுவலகம் எங்கே அமைக்கப்பட்டு இருக்கிறது, இதனால் பயனடையும் பாசன ஆயக்கட்டுகள் எத்தனை ஏக்கர் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டப் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு வள்ளியூரில் கொடுமுடியாறு நீர்த்தேக்கக் கோட்டம் என்ற ஒரு கோட்டத்தை ஆரம்பித்து இப்போது செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள். இதிலே வன இலாக்காவிற்குச் சொந்தமான 33.15 ஏக்கர் நிலங்களை நாம் எடுக்கவேண்டியதாக இருக்கிறது. அது வரைக்கும் காலதாமதம் செய்யாமல் அந்தப் பகுதியிலே இருக்கிற கால்வாய்களைப் புதுப்பிக்கும் பணிகளை முதலிலே எடுத்துக்கொள்ளும்படி, செயற்பொறியாளர் அவர்களிடம் அரசாங்கம் சொல்லியிருக்கிறது. ஆகவே அந்தப் பணிகளை இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் இந்தத் திட்டத்தால் 1,954 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு உறுதிப் பாசனமும், 1,925 ஏக்கர் பாசனம் பெறமுடியாமல் இருக்கிற நிலங்களுக்குப் பாசனமும் கிடைக்கும்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடியாறு திட்டத்தில் சேர்க்கப்பட்ட அந்த பரப்பளவோடு அந்தப் பகுதியிலே உள்ள கூடுதல் நிலங்களைச் சேர்க்க அரசு முன்வருமா? அதேநேரத்தில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, வன இலாக்கா 30 ஏக்கர் நிலம் விஷயமாக அவர்களைக் கேட்கவேண்டும் என்று சொன்னார்கள். வன இலாக்கா சொல்லுகின்ற இடங்களில் காரியங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான நிலங்களைச் சேர்க்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறது. பின்னாலே அதைப் பற்றி யோசிக்கலாம். அதேபோல் வனத்துறைக்கு சம்பந்தப்பட்ட இடங்களை எடுப்பதில் ஒருசில இடங்களில் தகராறுகள், மத்திய அரசாங்கத்திலே கேட்டுச் செய்யவேண்டியதாக இருப்பதால், அதையெல்லாம் துரிதப்படுத்திச் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்கின்றபோது, வனத்துறைக்குச் சொந்தமான சில ஏக்கர் நிலங்களை நமக்குப் பெற வேண்டியிருப்பதில், காலதாமதம் ஆகக்கூடாது என்ற வாசகத்தைச் சொன்னார்கள். 1970-லே தொடங்கி, 6 ஆண்டுகள் ஆய்வு செய்து, மத்திய திட்டக் கமிஷன் அனுமதி வழங்கி, மத்திய அரசு 35 லட்ச ரூபாய் வழங்கி வேலை நடந்தது ஒரு காலத்தில். இப்போது அங்கு அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. அங்கே மத்திய திட்டக் கமிஷன் அனுமதி வழங்கியதற்குப் பின்னாலேயும், இந்தச் சிரமம் ஏற்படுவதற்கு என்ன காரணம்? அதை உடனடியாக போக்கி வேலைகள் எப்போது துரிதப் படுத்தப்படும்? 60 பேர்களை அனுமதித்து இருக்கிறார்கள்.

1986 நவம்பர் 25]

அவர்கள் வேலையின்றி சும்மா இருப்பதாகத்தான் இப்போது தகவல் கடைசியில் வந்திருக்கிறது. இதற்கு ஆவன செய்ய நமது அமைச்சர் பெருமகனார் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வன இலாக்காவிற்குச் சொந்தமான இடங்களை நாம் எடுக்கவேண்டும் என்று சொன்னால், மத்திய அரசின் ஒப்புதல் பெறாமல் எடுக்க முடியவில்லை. அதை வேகமாகச் செய்து இப்போது வழிவகைகளை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல் அங்கே ஆட்கள் வெறுமனே சும்மா இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி வேலை நடக்காமல் இருக்கக்கூடாது என்ற எண்ணத்தோடுதான் அங்கேயுள்ள கால்வாய்களைப் புதுப்பிக்கும் பணியை முதலிலே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று செயற்பொறியாளர் அவர்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

டாக்டர் தே. குமாரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கொடுமுடியாறு அணைத் திட்டத்தை நிறைவேற்ற இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மிக்க நன்றி. அதேபோல் தமிழகத்தில் புதிதாக அணைகளைக் கட்டுகின்ற திட்டங்கள் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா? அதேமாதிரி அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்விலே நிறைய திட்டங்கள் இருக்கின்றன. தனியாகக் கேள்வி போட்டால், எந்தெந்தத் திட்டங்கள் ஆய்விலே இருக்கின்றன என்பதையும், அதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும் சொல்லமுடியும்.

தமிழ்நாட்டில் உலமாக்கள் ஓய்வு ஊதியம்.

118— (*வினா எண். 9097) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை நபர்களுக்கு உலமாக்கள் ஓய்வு ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது?

(ஆ) எவ்வளவு பணம் இதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1981-ம் ஆண்டு உலமா ஓய்வூதியத் திட்டம் முதலில் 400 பேர்களுக்கென்றே உருவாக்கப்பட்டது. இது, படிப்படியாக உயர்த்தப் பட்டு தற்போது இத்திட்டத்தினால் ?00 பேர்கள் பயனடைந்து வருகின்றனர். 1987-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கையை 1000 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.